**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051881

1. District மாவட்டம் : **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2022** FIR No.: மு.த.அ. எண் **04/2022** Date: நாள் **24.03.2022**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **22.03.2022** Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் **1400 Hrs** Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **24.03.2022** Time நேரம் : **0900 Hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I** Time நேரம் : **1000 Hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் **10 Kms North**
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **VAO Office, Karunthuvambadi, Tiruvannamalai District.**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.S.Sankar** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o.Sundaresan**
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-49** (d) Nationality : நாட்டினம் **Indian** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் **Farmer** (g) Address : முகவரி **No.90, Pillayar Kovil Street, Kolakaravadi Village, Tiruvannamalai Taluk, Tiruvannamalai District**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1.Tr.Kalaivanan, VAO, Kolakaravadi Village, Tiruvannamalai Taluk& District**
**2.Tr.Annamalai, Village Assistant, Kolakaravadi Village, Tiruvannamalai Taluk& District**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் **------**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

------

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ------

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ------

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 24.03.2022 ஆம் தேதி காலை 0900 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரர் சு.சங்கர், வயது-49, த/பெ.சுந்தரேசன், நெ.90, பிள்ளையார் கோவில் தெரு, கொளக்கரவாடி கிராமம், திருவண்ணாமலை வட்டம் மற்றும் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: நாள்:24.03.2022 அனுப்புநர் சு.சங்கர், வயது-49, த/பெ.சுந்தரேசன், நெ.90, பிள்ளையார் கோவில் தெரு, கொளக்கரவாடி கிராமம், திருவண்ணாமலை வட்டம் மற்றும் மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், இலஞ்ச ஒழிப்புத்துறை, திருவண்ணாமலை. ஐயா, நான் மேற்சொன்ன முகவரியில் என் குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். கொளக்கரவாடி

-இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Sankar 24/3/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 24/03/22

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.03.2022 at 1030 hrs.

Name: பெயர் S. PRABHU
Rank: நிலை Inspector of Police, V&AC, Tiruvannamalai. No. எண் ..........

கிராமத்தில் பூர்வீக சொத்தான சுமார் 1.44 ஏக்கர் உள்ள நிலத்தில் விவசாயம் செய்து ஜீவனம் செய்து வருகிறேன். நான் 12-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேலும் என்னுடைய தகப்பனார் சுந்தரேசன் மற்றும் தாயார் புதூராள் ஆகியோர் என்னுடன் வசித்து வருகிறார்கள். என் உடன் பிறந்த அக்கா விஜயா மற்றும் தம்பி விஜயகுமார் ஆகியோர் திருமணம் செய்து தனித்தனியாக குடியிருந்து வருகிறார்கள். எனது மகன் ரஞ்சித்குமார் M.Com., மற்றும் மகள் ரம்யா, M.Com., M.Phil., B.Ed., படித்துவிட்டு வேலை தேடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு இன்னும் திருமணம் செய்து வைக்கவில்லை. எனது சகோதரர் திரு.விஜயகுமாருக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். அவருக்கு இதுநாள் வரையில் ஆண் வாரிசு இல்லாத காரணத்தால் எங்களது பூர்வீக நிலத்தில் அவருக்கு சேர வேண்டிய பங்கினை என்னுடைய மகன் ச.ரஞ்சித்குமார் மைனர் என்ற காரணத்தால் என்னை கார்டியனாக நியமித்து கடந்த 17.04.2003 -ம் தேதி திருவண்ணாமலை 2 - இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1768/2003-ன் படி சர்வே எண்.8/1C, (பட்டா எண்.598 மற்றும் 138) இதில் உள்ளடங்கிய 0.43 செண்ட் நிலத்தினை எனது தகப்பனார் சுந்தரேசனும், தம்பி விஜயகுமாரும், ரூ.17,200/-க்கு விற்கிரையம் செய்து பதிவு செய்து கொடுத்தனர். மேலும் எனது தாயார் புதூராள் என்னுடைய மகன் ச.ரஞ்சித்குமாருக்கு கடந்த 29.06.2020-ம் தேதி திருவண்ணாமலை 2 -இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.4575/2020-ன் படி சர்வே எண்.8/1C, 8/1C2A (பட்டா எண்.598) இதில் 0.36 செண்ட் நிலத்தினை தான செட்டில்மெண்ட் செய்து வைத்தார். மேலும் எனது தகப்பனார் சுந்தரேசன் என்னுடைய மகன் ச.ரஞ்சித்குமாருக்கு கடந்த 04.07.2020-ம் தேதி திருவண்ணாமலை 2-இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.4783/2020-ன் படி சர்வே எண்.8/1C (பட்டா எண்.598 மற்றும் பட்டா எண்.138) இதில் 0.43 செண்ட் நிலத்தினை தான செட்டில்மெண்ட் செய்துவைத்தார். மேற்படி சொத்துகளை என்னுடைய மகன் ரஞ்சித்குமார் பெயரில் பட்டா மாறுதல் செய்ய கடந்த 24.01.2022-ம் தேதி திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நான் என்னுடைய மகன் பெயரில் மனு கொடுத்தேன். அதன் பிறகு திருவண்ணாமலை தாலுக்கா அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்தில் பட்டா மாறுதலுக்காக விண்ணப்பித்தேன். இது சம்பந்தமாக கடந்த 22.03.2022-ம் தேதி மதியம் சுமார் 2 மணியளவில் நான் கருத்துவாம்பாடி கிராமத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்திற்கு நேரில் சென்று கிராம நிர்வாக அலுவலர் திரு.கலைவாணன் அவர்களை சந்தித்து பட்டா பெயர் மாற்றம் சம்பந்தமாக கேட்டபோது, அவர் பட்டா பெயர்

மாற்றம் செய்து தர வேண்டுமானால் ரூ.6,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்றும், பணம் கொடுத்தால் மட்டுமே, வேலையை முடித்து தர முடியும் என்று கூறினார். அதற்கு நான் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் உள்ளேன் என்று சொன்னதற்கு, அவர் வேண்டுமானால் ரூ.500/- குறைத்துக்கொண்டு ரூ.5,500/- தொகை கொடுக்க வேண்டும் என்று கறாராக கூறிவிட்டார். அதன் பின்னர் அலுவலகத்தில் உடன் இருந்த கிராம சிப்பந்தி திரு.அண்ணாமலை என்பவரிடம் ரூ.5,500/- கொடுத்துவிடும்படி கூறினார். மேலும் சிப்பந்தி திரு.அண்ணாமலை என்பவரும் VAO அவர்கள் கூறிய பணத்தை கொடுத்தால் தான் பட்டா பெயர் மாற்றம் செய்ய முடியும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். எனவே அவரிடம், சரி சார், ஏற்பாடு செய்து தருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு ரூ.5,500/- பணத்தை இலஞ்சமாக கொடுத்து பட்டா மாறுதல் பெற விருப்பமில்லை. எனவே, எனது குடும்பத்தினரிடம் இது சம்பந்தமாக கலந்தாலோசித்துவிட்டு, எனக்கு தெரிந்த நபர் மூலமாக புகார் மனுவை கம்ப்யூட்டரில் தட்டச்சு செய்து, இன்று திருவண்ணாமலை இலஞ்ச ஒழிப்பு துறை அலுவலகம் வந்து புகார் அளிக்கிறேன். எனவே, என்னிடம் பட்டா பெயர் மாற்றம் செய்ய இலஞ்சம் கேட்ட கிராம நிர்வாக அலுவலர் திரு.கலைவாணன் மற்றும் கிராம சிப்பந்தி திரு.அண்ணாமலை ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (SdXXXXX) S.Sankar 24.03.2022

Sir,

Received the complaint on 24.03.2022 at 0900 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officers and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 24.03.2022 at 1000 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.04/2022, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned. (Sd/-XXXXX) 24.03.2022. S.Prabhu, Inspector of Police, V&AC, Tiruvannamalai.

(signature) 24/03/2022
Inspector of Police,
V&AC, Tiruvannamalai.